

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (01.08.2024) சென்னை, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில் ”உலக தாய்ப்பால் வாரம் (ஆகஸ்ட் 1 முதல் ஆகஸ்ட் 7 வரை) தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விழிப்புணர்வு உறுதிமொழியினை ஏற்றனர். இந்நிகழ்வில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், கூடுதல் இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.



குரோம்பேட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட கல்வித்துறை சார்பில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு பள்ளி மாணவ/மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கினார். மேலும் பத்தாம் வகுப்பு 12ஆம் வகுப்பு கடந்த ஆண்டு தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ/மாணவிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி ஏற்பாட்டில் 10,000, 7000, 5000 என ஊக்கத்தொகை நற்சான்றிதழ் கேடயம் வழங்கப்பட்டது. அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி, மண்டல குழுத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதிச் செயலாளர்கள் த.ஜெயக்குமார், இ.எஸ்.பெர்னாட், மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் ஆசிரியர்கள் உள்ளனர்.

# இன்று பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு விழிப்புணர்வுக் கூட்டம்!

சென்னை, ஆக. 2

தமிழ்நாட்டில் அனைவருக்குமான கல்வியை வழங்குவதில் 37,592 (முப்பத்தி ஏழாயிரத்தி ஐநூற்றி தொன்னூற்று இரண்டு) அரசுப் பள்ளிகளின் பங்கு மிக முக்கியமானது. அதில் 37,312 அரசுப் பள்ளிகளில் தேர்வு செய்யப்பட்டிருக்கும் பள்ளி மேலாண்மைக் குழுக்களில் பெற்றோர்கள் பொறுப்பேற்று சிறப்புடன் செயல்பட்டு வருகின்றனர்.

இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009-ன் படி, தங்கள் குழந்தைகள் படிக்கும் அரசுப் பள்ளிகளை குழந்தைகளின் பெற்றோர்களே மேலாண்மை செய்யும் உரிமையை பள்ளி மேலாண்மைக் குழு (smc) அவர்களுக்கு அளிக்கிறது. அதாவது பெற்றோர்கள், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், முன்னாள் மாணவர்கள், இல்லம் தேடிக் கல்வி கல்வியாளர்கள் இவர்களை உள்ளடக்கியதே பள்ளி மேலாண்மைக் குழு.

கடந்த 2022-ஆம் ஆண்டு தமிழ்நாடு முழுவதிலும் ஒரே நாளில் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் நடந்த பள்ளி மேலாண்மைக் குழு (smc) மறுகட்டமைப்புக்கான விழிப்புணர்வு கூட்டங்களில் 23.2 இலட்சம் பெற்றோர்கள் பங்கேற்றனர்.

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள மொத்த பள்ளி மேலாண்மைக் குழுக்களில், 6,83,959 (ஆறு லட்சத்து எண்பத்தி மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தி ஒன்பது) பெற்றோர்கள், அதன் உறுப்பினர்களாக பங்கேற்று பள்ளிகளுடன் ஒருங்கிணைந்து பங்காற்றி வருகின்றனர்.

SMC கூட்டமானது கடந்த இரு ஆண்டுகளில் 16 முறை கூடியுள்ளது. இக்கூட்டங்களின் மூலம் நம் அரசுப் பள்ளிக் குழந்தைகளின் கற்றல் திறன் மேம்பாடு, இடைநிற்றலை கண்காணிப்பது, உயர்கல்வி வழிகாட்டுதல், சுகாதாரம், பாதுகாப்பு, பள்ளிகளின் உட்கட்டமைப்பு போன்ற பள்ளியின் பல்வேறு தேவைகளை கண்டறிந்து அதை அனைவரும் கலந்தாலோசித்து இயற்றப்பட்ட தீர்மானங்கள் மொத்தம் 3,85,697 செப்டம்பர் 2022 முதல் ஜூலை 2024 வரை.

பள்ளி மேலாண்மைக் குழுவில் இயற்றப்பட்டுள்ள தீர்மானங்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணும் வண்ணம் மாநில அரசின் தலைமைச் செயலர் தலைமையில் 14 பிற துறைகளை சார்ந்த செயலர்களை உள்ளடக்கிய மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவும் (SLMC), ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் தலைமையில் துறை சார்ந்த மாவட்ட தலைமை அதிகாரிகள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், SMC தலைவர்கள் மற்றும் குடிமைச் சமூக அமைப்பின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய 24 பேர் கொண்ட மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவும் (DLMC) அமைக்கப்பட்டுள்ளது.

இயற்றப்பட்ட தீர்மானங்களுக்கு தீர்வு காணும் வண்ணம் நம் அரசுத்துறையும், பள்ளி மேலாண்மைக் குழுவும் இணைந்து கட்டிடம் பழுது பார்த்தல் 5004, மின்சாரம் சார்ந்த தேவைகள் 1747, புதிய நீர் இணைப்பு 998, பழுதடைந்ததால் இடிக்கப்பட வேண்டிய கட்டிடங்கள் 995, பள்ளிக்கு வராமல் இடையில் நின்றுபோன மாணவர்களின் சேர்க்கை நடந்த பள்ளிகள் 800, பள்ளி வயதில் பள்ளியில் சேராத குழந்தைகளின் சேர்க்கை நடந்த பள்ளிகள் 592 போன்றவற்றை உள்ளடக்கிய 10,136 தீர்மானங்கள் உட்பட மொத்தம் 92,646 (ஜூலை 2024 வரை) தீர்மானங்களுக்கு/தேவைகளுக்கு, மாவட்ட நிர்வாகம், பள்ளி மேலாண்மைக் குழு, பிற துறைகள் அனைத்தும் இணைந்து தீர்வு கண்டுள்ளது. இதன் மூலம் பெற்றோர்களுக்கான, குழந்தைகளுக்கான சட்டப்பூர்வமான உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் பள்ளி மேலாண்மைக் குழுவிற்கும் அரசுக்குமான இணைப்பை பெற்றோர் செயலி ஏற்படுத்தி வருகிறது . இச்செயலியை பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் அனைவரும் இன்னும் எளிமையாக பயன்படுத்தும் வண்ணம் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு முதல் அரசுப் பள்ளிகளில் அதன் விழுதுகளாகிய முன்னாள் மாணவர்களின் பங்கேற்பை உறுதி செய்யும் விதமாக, பள்ளி மேலாண்மைக் குழுக்களில் அவர்களும் இணையவுள்ளனர். முன்னாள் மாணவர்கள் இக்குழுவில் இணைவதன் மூலம் பள்ளி மற்றும் சமூகத்திற்கும் இடையே நல்லதொரு இணைப்பை ஏற்படுத்தி, பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை ஒருங்கிணைத்து, அரசுப் பள்ளியின் மேம்பாட்டிற்கும் மாணவர்களின் வளர்ச்சிக்கும் தோளோடு தோள் நிற்பர்.

கடந்த இரு ஆண்டுகளாக பள்ளிகளின் மேம்பாடு மற்றும் மாணவர்களின் வளர்ச்சியில் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் பெரும் பங்கு வகித்து வருகின்றன. இவ்வாண்டு நடைபெறவுள்ள பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நிகழ்வில் நாம் அனைவரும் பங்கேற்று பள்ளிகளில் சமூகத்தின் பங்களிப்பை உறுதி செய்வோம்.

இன்று (ஆகஸ்ட் - 2) நடைபெறவுள்ள பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்புக்கான விழிப்புணர்வுக் கூட்டத்தில்/அறிமுகக் கூட்டத்தில் பெற்றோர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் மற்றும் கல்வி சார்ந்து செயல்படும் அனைவரும் பங்கேற்று பள்ளி மேலாண்மைக் குழுவை வலுப்படுத்துவோம்!!! பள்ளிகளை வளப்படுத்துவோம்!!! என்று தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அன்போடு கேட்டுக்கொள்கிறது.

நம் பள்ளி!! நம் பெருமை!!

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நேற்று (01.08.2024) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், திரு.வி.க.நகர் மண்டலக் கண்காணிப்பு அலுவலர் பி.கணேசன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், திரு.வி.க. நகர் மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### என்.பரந்தாமன் - கே.கருணாகரன் முன்னிலை! புழல் எம்.நாராயணன் தலைமையில்

# மாதவரம் 17வது வட்டம் வட பெரும்பாக்கத்தில் புதிய நியாய விலை கடை!

## மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

சென்னை, ஆக. 2-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் பகுதியில் பகுதி நேரமாக செயல்பட்டு வந்த நியாய விலை கடை, இன்று தரம் உயர்த்தப்பட்டு முழு நேர நியாய விலை கடையாக திறந்து வைக்கப்பட்டது.

கடந்த 1996 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞரின் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்றவுடன் வடபெரும்பாக்கம் பகுதியில் பகுதி நேர நியாய விலை கடை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து, அதன்படி கலைஞரின் அரசு வடபெரும்பாக்கம் பகுதியில் பகுதி நேர நியாய விலை கடையை அமைத்தது. அப்பொழுது சட்டமன்ற உறுப்பினர் டி. சி. விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் செ. குப்புசாமி, முன்னாள் மாவட்ட செயலாளர் கும்மிடிப்பூண்டி கி. வேணு, என். எம். துரைசாமி,எம். ஜெயபால் ஆகியோர் முன்னிலையில் மேற்படி நியாய விலை கடையை திறந்து வைக்கப்பட்டது.

பகுதி நேர ரேஷன் கடை செயல்பட்டு வந்த ரேஷன் கடைகள், தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு 800 கார்டுகள் கொண்ட கடைகளை முழு நேர கடைகளாக தரம் உயர்த்தி ஆணைகள் பிறப்பித்தது. அந்த வகையில் வடபெரும்பாக்கம் பகுதியில் செயல்பட்டு வந்த பகுதி நேர நியாய விலை கடை முழு நேர நியாய விலை கடையாக தரம் உயர்த்தப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டது .

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம் எல் ஏ கலந்து கொண்டு புதிய நியாய விலைக் கடையை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை ஆகியவற்றை வழங்கி விற்பனையை துவக்கி வைத்தார்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, பொதுக்குழு உறுப்பினர் என். பரந்தாமன், 17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

புதிய நியாய விலை கடை திறப்பதை முன்னிட்டு பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. மேலும் இந்த நிகழ்ச்சியில் வட்ட கழக நிர்வாகிகள் சி. பாலாஜி, சி. மூர்த்தி பகுதி நிர்வாகிகள் வி .திராவிட வீரன், கே. ராஜா,என். குமார், என். நாகராஜன், சேகர் ராஜன், எஸ். தேவராஜ், விஸ்வநாதன், ஏ. எஸ்.மாரி, பாக முகவர் டி. திவாகர், சங்கர்லால், அருண்ராஜ், அரவிந்த், திருப்பதி, பசுபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

### அருந்ததியினருக்கான 3 விழுக்காடு உள் ஒதுக்கீடு தீர்ப்பு:

# ‘திராவிட மாடல்’ அரசின் சமூக நீதிக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி!

## பொதுமக்களுக்கு இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. இனிப்பு வழங்கினார்

சென்னை, ஆக. 2 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2009ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட அருந்ததியர் சமூகத்திற்கு 3 சதவீத உள் ஒதுக்கீடு அளிக்கும் சட்டத்திற்கு அங்கீகாரம் அளித்து ஏழு நீதிபதிகள் அடங்கிய உச்சநீதி மன்ற அரசியல் சாசன அமர்வு அளித்திருக்கும் தீர்ப்பு திராவிட மாடல் அரசின் சமூக நீதிக் கொள்கைக்கும், அடித்தட்டு மக்களைக் கைதூக்கிவிட வேண்டுமென்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சமூக நீதிச் சிந்தனைக்கும் கிடைத்திட்ட வெற்றியாகும்.

இவ்வெற்றியைக் கொண்டாடும்விதமாக, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதிக்குட்பட்ட கீழ்ப்பாக்கம் புல்லாபுரத்திலும், சூளை குறவன் குளத்திலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, பொதுமக்கள் மத்தியில் உரையாற்றி இனிப்புகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் இளங்கோ, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய மாநில உறுப்பினர் வழக்கறிஞர் ஜி.கே.ராஜன், முன்னாள் வட்டச் செயலாளர் புருஷோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், முன்னாள் பகுதிப் பொருளாளர் கலையரசன், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மா. காந்தி, கமலக்கண்ணன்,

பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் இரா.வெற்றிவேல், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்பரசன், எழும்பூர் தெற்குப் பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் குருமூர்த்தி, 108 (அ) வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், பாக முகவர் கவிதா, குணசேகரன், சூளை பன்னீர், வழக்கறிஞர் நேரு பிரபா, கோமகன், புஷ்பராஜ், பிரம்மதேவன், பாலாஜி அன்புமணி, கே.ஐசக், என்.ஆர்.பிரசாத், எம்.யாகப், கே.கபில், கே. ஷியாம் டேனியல், கே. டேவிட் ராஜ், என்.பி.பிரசன்னகுமார், என்.ஆர்.இஸ்ராயில் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.



கும்முடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி ஒன்றியம் பாதிர்வேடு ஊராட்சியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களை பரிசீலனை செய்து தீர்வு காணப்பட்டு சான்றிதழ்களை மாவட்ட கழக செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்த ராஜன் வழங்கினார். உடன் மு.மணிபாலன் எஸ்.ரமேஷ், மாலதிகுணசேகரன், பா.செ.குணசேகரன், பா.முத்து சாமி இரா.அறிவழகன் கே.ஆறுமுகம், எஸ்.உதயகுமார், க.சு.தமிழ்உதயன், பி.முத்து, கு.கரிகாலன், ரகுமான்கான், ஆர்.பார்த்தசராதி, ஏசுரத்தினம், வழக்கறிஞர்.தங்கதேவன், கே.என்.பழனி, பா.சந்திரமோகன், அமுல்ராஜ், மெய்யழகன், க.பரத்குமார், சி.மணிகண்டன், உதயகாந்தம்மாள், திருஞானம், ஜி.மனோகரன், கே.நரேந்திரன், லால், பா.பரத்குமார், பேண்டாசிவா, பிர்லா, கே.வி.ஜி.நாகராஜ், ஊராட்சிமன்ற தலைவர்கள் சீனிவாசன், லாரன்ஸ், மூர்த்தி, ஐடி.விங். கார்த்திக், மணிகண்டன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

